செய்தித் தாளாகப் பதிவுபெற்றது:

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு தைமீ கஅ-உ வெள்ளிக்கிழமை (31-1-1975)] [இல: கரு

## இன்று சண்டேசுரநாயனர் குருபூசை

தை உத்தரத் திரு நாளில் மும்மையால் உலகாண்ட முதன்மைத் திருத்தொண்டர்களிற் ஒருவராம் சண்டேசுர நாயனர் குருபூசை நிகழுகின்றது.

பண்ணின் பயனு நல்லிசையும் பாலின் பயனு மின்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியுங் கருத்தின் பயனு
மெழுத்தஞ்சம்
விண்ணின் பயனும் பொழிமழையும் வேதப் பயனுஞ்
சைவமும்போன்
மண்ணின் பயனு மப்பதியின் வளத்தின் பெருமை
வரம்புடைத்தோ.

நாவலர்பெருமான் சூசனத்தில் இந்நாயனரின் பெருமையை இவ்வாறு விளக்குகின்றார்.

இச் சண்டேசுர நாயனரது பெருந்தன்மை

"பீரடைந்த பாலதாட்டப்
பேணுதவன் ருதை
வேரடைந்து பாயந்த தாளை
வேர்தடிந் தான் றனக்குத்
தாரடைந்த மாலை சூட்டித்
தலைமை வகுத்த தென்னே
சீரடைந்த கோயின்மல்கு
சேய்ஞலூர் மேயவனே"

என்றார்,

"கடிசேர்ந்த போது
மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங்
காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை
யறவெட்டிட முக்கண் மூர்த்தி
படிசேர்ந்த வண்ண மறிவார்
சொலக் கேட்டு மன்றே"

என்றும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனராலும்.

"தழைத்ததோ ராத்தி
யின்கீழ்த் தாவர மணலாற்
கூப்பி
யழைத்தங்கே யாவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக்
கண்டு
பிழைத்ததன் றாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார்
குறுக்கைவீ ரட்டனரே"

எனத் திருநாவுக்கரசு நாயனராலும்,

"ஏத நன்னில மீரறு வேலி
யேயர் கோனுற்ற விரும்பிணி
தவிர்த்துக
கோதனங்களின் பால்கறந்
தாட்டக் கோலவெண்மணற்
சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண்
டிக்குன் சடைமிசைமல
ரருளசெயக் கண்டு
பூதவாளிநின் பொன்னடி
யடைந்தேன், பூம்பொ
ழிற்றிருப் புன்கூரு ளானே"

எனச் சுந்தரமூர்த்தி நாயனராலும்,

"தீதில்லை மாணி
சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதை
தனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப வீசன் றிருவருளாற்
றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா
தோணோக்கம்"

என மாணிக்கவாசக சுவாமிகளாலும்,

'தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கு மண்டத்
தொடுமுடனே
பூதலத் தோர்கள் வணங்கப்
பொற்கோயிலும் போனக
மும்மருளிச்
சோதி மணிமுடித் தாமமு
நாமமுந் தொண்டர்க்கு
நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு
கூறுதுமே"

எனச் சேந்தனாராலும்,

"பாதகமே யென்றும்
பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத்
தாளிரண்டுஞ் — சேதிப்பக்
கண்டீசர் தாமாம்
பரிசளித்தார் கண்டாயே

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

காங்கேயன் றுறை

# இடைத் தேர்தல் இடை நோக்கு....!

காங்கேசன்றுறை இடைத் தேர்தல் பெப்பரவரி 6-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. இன்றிருக்கும் அரசியற் சூழ்நிலையிலே தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதற்கோ அல்லது பிற்போடப்படுவதற்கோ எத்தகைய அறிகுறிகளும் இல்லை. இன்று (31-1-75) நடைபெறும் தோட்டத் தொழிலாளரின் அடையாள வேலை நிறுத்தமும் இத் தேர்தலை எந்த வகையிலும் பாதிக்கும் என்று கூறுவதற்கில்லை.

இடைத் தேர்தல் முடிவு எவ்வாறு அமையும் என்பதனைத் தேர்தலிற் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் உட்பட அனைவரும் நன்கு அறிந்து தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனைய இடைத் தேர்தல்களைப்போன்று தேர்தல் முடிவில் யார் வெற்றிபெறுவார்கள் என்ற கேள்விக்கு காங்கேசன்றுறையில் இடம் இல்லை, என்றாலும் ஒவ்வொரு வேட்பாளரும் தாங்கள் பெற இருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையில் அதிக சிரத்தையுடையவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் மறுக்க முடியாது.

1970 மே 27 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது காங்கேசன்றுறைத் தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 37,804 ஆகும் இதில் வாக்களித்தவர்கள் தொகை 30,663 ஆகும்

நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 41.0000 வரையில் இவ்விடைத்தேர்தலில் வாக்களிப்பு விகிதம் பொதுத் தேர்தலைவிடச் சற்று அதிகமாக இருக்கும் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. தேர்தற் பிரசார வேகத்தையும், மக்கள் இடையில இருக்கும் ஆர்வத்தையும் அளவு கோலாகக் கொண்டு பார்க்கும்பொழுது சுமார் 38,000 வாக்காளர்கள் இத் தேர்தலில் வாக்களிப்பார்கள் என்று குத்து மதிப்பீடாகக் கூற முடியும். எனவே வெற்றி பெறும் வேட்பாளர் எப்படியும் 19,000க்கும் சற்று கூடுதலான வாக்குகளைப் பெற்றேயாகவேண்டும்.

[ வளர்ச்சி 5-ஆம் பக்கம் ]

# சாத்திரத்திற் காவியம்

## "கந்தன் கழலிணைகள் கருத்தில் வைப்பாம்"

[ "சைவ சித்தாந்த போதகர்" ]

'உண்மையைச் சொல்" என்பது ஓர் உண்மை. அதனை விளக்க அரிச்சந்திரன் கதை. முன்னது உணர்ச்சிக் கலப்பற்றது. பின்னது உணர்ச்சிக் கலப்பானது. காவியம், நாடகம், புராணம் என்பன உணர்ச்சிக் கலப்புடன் உண்மையைக் கூறுவன. சாத்திரம் உணர்ச்சிக் கலப்பின்றி உண்மையைக் கூறுவது. வெறும் உண்மை எல்லோர் உள்ளத்தையும் தன்பால் ஈர்க்காது. அஃதோர் காவியத்தன்மை பெறுமாயின் எல்லோர் மனதையும் ஈர்க்கவல்லது. சிவஞானபோதம் முதல் வகையது. அதன் வழி நூல் சார்புநூல்களாகிய சிவஞான சித்தியார் சிவப்பிரகாசம் இரண்டாம் வகையன.

சிவஞானபோதம் மூலமூர்த்தியாயின் சித்தியார் சிவப்பிரகாசம் உற்சவ மூர்த்திகள். முறையே இவை

( வளர்ச்சி 5-ஆம் பக்கம் )

## அடையாள வேலை நிறுத்த ஆலோசனை நிறுத்தப்பெற்றது

### ஆயினும் தோட்டத்தொழிலாளர் அந்த அடையாளத்தைக் காட்டுகின்றனராம்

யாத வேதனம் இருபத்தைந்து ரூபாவாற் கூடும் என்ற சமரசப் பேச்சின் முடிவு இன்று நடைபெறவிருந்த அடையாள வேலை நிறுத்தத்தைக் கைவிடச்செய்து விட்டது.

பிரதமரும் இதர அமைச்சர்களும் சேர்ந்து தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்திலே இந்த முடிவு செய்யப்பட்டது.

1975 உம் மாதம் தொடங்கி இந்த வேதன உயர்ச்சி நடைமுறையிலே கொணடு வரப்படு மென்று ஊகிக்க இடமுண்டு.

தோட்டத் தொழிலாளர் சங்கங்களில் இரண்டும், வர்த்தக சங்க அங்கத்தவர்களும் இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## கொழும்பு விவேகானந்த சபை

விவேகானந்த சபையின் வரலாற்றைத் தொகுக்க எத்தனித்துள்ளோம். சபையின் முன்னை நாள் நிர்வாகிகளும், சபை நீண்டகாலத் தொடர்பு கொண்டவர்களும் சபையின் வரலாறறைத் தெரிந்த வரைக்கும் இப்பணிக்கு உதவும் முகமாக தாம் அறிந்தவற்றை எமக்கு அறியத்தந்தால் சபை வசமிருக்கும் குறிப்புகளுடன் சோத்துக் கொள்ளலாம்.

தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொண்டு கௌரவ பொதுச் செயலாளர், திரு. க. இராஜபுவனீஸ்வரன், 34. விவேகானந்த மேடு என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

நேயர்கள் நெஞ்சம்

# திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி

[அருள். தியாகராசா, உப-தலைவர் கொழும்பு விவேகானந்த சபை]

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை விடுத்த வேண்டுகோளிற் சில பகுதிகள் பற்றி ஓர் நல்ல செய்தியொன்றைத் தங்கள் 24—1—75 இல் பிரசுரமான பத்திரிகையில் வாசித்து மகிழ்ந்தேன்.

திருக்கேதீஸ்வர ஆலயம் மன்னருக்கு அருகிலுள்ள மாந்தையில் இருப்பதை அறியாத ஒரு சிலர் இன்றும் இருக்கிறார்கள். மாந்தையின் பழம்பெருமை பதிற்றுப்பத்து முதலிய சங்க இலக்கியங்களிற் கூறப்பட்டுள்ளது. காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் 38 ஆண்டுகளுக்கு முன்னர் "மாந்தை" பற்றி ஈழகேசரி ஆண்டு மலரில் வெளியிட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை என்னைப் பெரிதும் கவர்ந்தது. இராவணேஸ்வரனுக்கும் அவன் மனைவி மண்டோதரிக்கும் திருக்கேதீஸ்வரப் பெருமான் மீதிருந்த குன்றாத பேரன்பைக் "கதிரைமலைப்பள்ளு" என்ற நூலைப் பதிப்பித்த தமிழறிஞர் தி. வ குமாரசாமிப்பிள்ளை அவர்கள், அந் நூலின் முகவுரையில் அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இவற்றை விட வேறும் பல நூல்களும் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பெருமையை நுவலுகின்றன.

எங்கள் நாவலர் பெருமான் திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் பழைய உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று முயன்றார், வேண்டுகோள் விடுத்தார். ஆறுமுகநாவலர் பெருமானுக்கு யாம் செய்யும் கைம்மாறு. திருக்கேதீஸ்வர ஆலயத்தை நல்ல முறையில் புதுப்பிக்க எல்லும் வகையால உதவி செய்தலேயாம். நாவலர் பெருமானைத் தொடர்ந்து, சேர். பொன். இராமநாதன், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், பசுபதிச் செட்டியார், சைவப் பெரியார் சு சிவபாதசுந்தரம்பிள்ளை, வட்டுக்கோட்டை கனகரத்தினம், அண்மையில் சேர். கந்தையா வைத்தியநாதன் முதலியோர் திருக்கேதீஸ்வரம் பழைய நிலையை அடைந்தால் தான் தமிழ் மக்களுக்கு இந் நாட்டில் நல்ல வாழ்வுண்டு என்று கூறி அதனை நிறைவேற்ற அல்லும் பகலும் அயராது உழைத்தார்கள்.

சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தின் 55 வது ஆண்டு விழா திருக்கேதீஸ்வரத்தில் 1960ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டு விழாச் செலவின் பெரும்பகுதியை சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தாமே தமது சொந்தப் பணத்தில் செலவழித்தார். திருக்கேதீஸ்வரத்தைத் தென்னாட்டவர்களுக்கு மீண்டும் அறிமுகப்படுத்தவே இப்படிச் செய்ததாக எம்மிடம் கூறினார்.

இப்பொழுதுள்ள திருப்பணிச் சபையினர் இச் சிவஸ்தலத்தை 'கோயில்' என்று அமைக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். அதாவது பாடல் பெற்ற இத்திருத்தளி ஈழநாட்டின் சிதம்பரமாக விளங்க வேண்டுமென்பதாம். இத் திருப்பணிக்கு எட்டரை இலட்சம் ரூபா வரை தேவை. (தொடரும்)

## பிரிவிடுதல் நொத்தீஸ்

மல்லாகம் மாவட்டக் கோட்டில்

வழ: P. 1573

தொண்டைமானாறு, இராசசேகரம் தொண்டபாநாபன்

எதிராக — வழக்காளிகள்

(1) தொண்டைமானாறு இராசசேகரம் ஸ்ரீ பத்மநாதன்
(2) வல்வெட்டித்துறை தற்போது 'செல்வராணி' பண்டிருப்பு கல்முனை கணபதிப்பிள்ளை ஆனந்தவேலு
(3) வயாவிளான் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
(4) வயாவிளான் குருநாதி கதிரேசுவும் பெண்
(5) தங்கரத்தினமும்
(6) பலாலி தெற்கு நாகமணி கணேசதாசன்
(7) பலாலி தெற்கு நாகமணி சண்முகதாசன்
(8) வயாவிளான், வயாவிளான் — பலாலி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

— எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை 'தோரையன்காடு' நி. பர. 160. விசாலமுள்ள ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடரந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975ம் வருடம் மார்ச்சு 13ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

**T. குலவீரசிங்கம்**

பதிவாளர்

1974ம் ஆண்டு மார்கழி மீ 5ம் திகதி

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 31—1—1975 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. நம சிவப்பிரகாசம்

ஆசிரியர் : திரு. மு. மயில்வாகனம்

# முனிவர் அளித்த அருஞ் செல்வம்

த. இராமநாதபிள்ளை B A. Lond

[முன் வளர்ச்சி — 2]

"வினையின் நீங்கி
விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது
முதனூ லாகும்"

இத் தொல்காப்பியச் சூத்திரத்துரையின் கண் முன் என்பது முனை எனவும் முன்னோர் என்பது முனைவர் எனவும் வழங்குமென நச்சினார்க்கினியர் இயம்பினர். இம் முனைவன் என்பதே முன்வன் என இன்று வழங்கி வருகிறது. வினையின் நீங்கிய இறைவனோடு முனிவர் ஒப்பாராகலின், முனிவர் என்போர் மக்களுள் தலைசிறந்தவராவர் என்பது போதரும், தமிழ் ஆரியர் என்னும் இந்துக் கூட்டத்தினருடைய ஒழுக்கம், சமயம், கலை என்பவற்றை வரையறுத்து விளக்கி ஓம்பிவந்தோர் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகள் முதலாக இருந்துவந்த முனிவர்களே என யாம் துணியலாம். "கற்றோருக்குத் தாம் வரம்பாகிய தலைமையர்" என்னும் இம் முனிவர்களுடைய பெருமையை விரித்துரைத்தல் இலகுவன்று.

முனிவர்கள் சனசமுதாயத்தில் முதல்வராயிருந்து வாழ்க்கைக்கு வழிகாட்டி வந்தனர். முனிவர் தம் வாழ்க்கையாலும், போதனையாலும் மக்களை நல்லாற்றுப் படுத்தினர் இம் முனிவர்கள் இல்லறத்தையோ, துறவறத்தையோ போற்றினர் என்பதை யாம் ஆராய்தல் அவசியமாகும். முனிவர் என்றால் சடை வளர்க்கும் கானவர் என எண்ணுதல் உண்டு.

பண்டைக் காலத்தில் கீழ் நாடுகளிலும் மேல்நாடுகளிலும் அரசன் முதலாக, ஆண்டி ஈறாகச் சடைவளர்த்தலே வழக்கம்.

முனிவர்களுட் பெரும்பாலோர் இல்லற வாழ்க்கையையே கைக் கொண்டனர்.

காமமோடு கடுஞ்சினந் தவித்து துறவறத்தில் ஒழுகிய முனிவர்களும் இல்வாழ்க்கையின் சிறப்பை விளக்குதற்கே துறவியாயினர்.

உபநிடத காலத்திலிருந்த சனகர், யாஞ்ஞவற்கியர் முதலியோரும், இராமாயண காலத்திலிருந்த வசிட்டர் கௌசிகர் முதலியோரும் இல்லறம் நடாத்தியிருந்து துறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும் என்னும் தருமங்களை நமக்கு உபதேசித்தனர். பொதிய மலையில் இருந்த அகத்தியரும் இல்லறத்தையே தழுவினர். ஆனால் சமண முனிவர்களும் பௌத்த முனிவர்களும் துறவறத்தையே தழுவினர்.

முனிவர்களைக் காட்டில் வசிக்கும் கானவர் எனக்கருதுதல் தவறு. முனிவர் கூட்டங்கள் விலங்குகள் உறையும் காடுகளில் வசிக்கவில்லை. முனிவர்களுடைய ஆசிரமங்கள் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அண்மையி

வளர்ச்சி 6-ம் பக்கம்

# நாவலர் பிள்ளைத்தமிழ்

[ எட்டாவது : சிற்றிற் பருவம். ]

**ஆக்கம் : — "பழைய பாணி" —**

(முன் வளர்ச்சி — 73)

பற்றும் பற்றைப் பற்றியுயும்
பரிசொன் றறியார் பாருலகோர்
பற்றுப் பற்றும் பணம்பற்றிப்
பருமா ளிகையுஞ் சூளிகையும்
சுற்று மதிலுஞ் சுகபோகச்
சூழல் பலவும் வகுத்தவைதஞ்
சொந்த மெனவே மாந்தயர்வர்
சொல்லி யிவர்க்கென் பயனவற்றைச்
சற்றே தட்டிச் சிதைத்துவிடிற்
றாமே யுணர்வ ரெனும் பூட்கை
தலைநின் றனையே லஃதொக்கும்
தமியேம் மழைக்கு வெயிற்கொதுங்குஞ்
சிற்றி லழித்தல் செயலன்றாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா சிற்றில் சிதையேலே. (9

○

வீடு நிறைய வந்தனையும்
வித்வப் பெரியோர் நினைக்காண
வேண்டி யழைப்பர் வேதியர்கள்
விபூதி சாத்த விசாரிப்பர்
ஏடு மெழுத்தா ணியுந்தாங்கு
மிளைஞர் பலருந் தம்நடுவுள்
இருத்திக் கொஞ்ச நினைவிழைவர்
எங்கே யிவனென் றெழும் பரிவால்
ஓடி யலைந்து நாற்றிசையும்
உனதன் னையரு முனைத்தேர்வர்
உற்றார் தாமுங் கலாய்த்திடுவர்
உன்மாட் டன்பா லுழன்று நினைத்
தேடு மவர்முன் சென்றிடு நீ
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா சிற்றில் சிதையேலே. 10.

## கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம் கொட்டடி ஸ்ரீ பாலஞான வைரவர் கோவிலில் கடந்த 27-1-75 முதல் கந்தபுராண படனம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்புராண படனம் தொடர்ந்து தினமும் மாலை 6.00 மணி முதல் நடைபெறும் இப்புராண படனத்தை அறப்பணிக் காவலர் வே. சபாபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களும் சைவப்புரவலர் வே. கந்தசாமி அவர்களும் நடாத்தி வருகின்றார்கள்

இப்புராண படன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு புராணத்தை வாசிப்பதற்கும், பொருள் சொல்வதற்கும் விரும்பும் அறிஞர்களும் புராணப் படிப்பு உபயங்களில் பங்கு பற்ற விரும்புவோரும் நிகழ்ச்சிப் பொறுப் பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளார்கள்.

## ஸ்ரீ கந்தப்பிள்ளை உபாத்தியாயர் தினம்

—0—

வேலணை திருஞானசம்பந்தர் மடலாய பரிபாலன சபையாதரவில் 23-1-75 வியாழக்கிழமை வேலணை ஸ்ரீ கந்தப்பிள்ளை உபாத்தியார் தினம் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கொண்டாடப் பெற்றது. வழமைபோல மடாலயக் கொட்டகையில் சிவ பூசை செய்யப்பெற்றது. வித்தியாசாலை மண்டபத்தில் பிள்ளைகளும் ஆசிரியர்களும் கூடினர்

கந்தப்பிள்ளை உபாத்தியாயருக்கு அஞ்சலி செலுத்தப்பெற்ற பின் கந்தப்பிள்ளை உபாத்தியாருடைய சேவைகளைப் பாராட்டி திரு மு. மயில்வாகனம் அவர்களும் பண்டிதர் க. சிவகடாச்சம் அவர்களும் உரையாற்றினர். ஈற்றில் பிள்ளைகளுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

# சாத்திரத்திற் காவியம்

( 1ஆம் பக்கத்து வளர்ச்சி )

அப்பர் சுவாமிகள் அருளிய ஐந்தாம் ஆறும் திருமுறைகளாகிய திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் போன்றவை. திருத்தாண்டகம், புராணம் காவியம் போல ஓசைச் சிறப்பு, நவரசமெய்ப்பாடு காட்சி வருணனை நிறைந்தவையாகச் சித்தியார் சிவப்பிரகாசம் அமைந்துள்ளன. சாத்திரமாக மாத்திரமன்றித் தோத்திரமாக, காவியம் புராணமாக, இலக்கியமாக இவை அமைந்தன. சிவஞானபோதம் ஒன்றே சாத்திரம் எனக் கூறுமற் கூறித் தமிழில் எழுந்த உயர்ந்த காப்பியச் சுவையை எம்மிடையே நுகருங்கள் எனச் சொல்வன போலமைந்தவை இவை.

ஆகவே காவியங்கட்குரித்தாகிய ஓசைச்சிறப்பு வாய்ந்த ஆசிரிய விருத்தத்தால் இச்சாத்திரங்கள் அமைந்துள்ளன. பாயிரத்தில் பல்வேறு வணக்கப் பாடல்கள் உள. அவையாவும் தோத்திரங்களாகவும் சிறந்த காவியச்செய்யுள்களாகவும்கொள்ளத்தக்கவை. முருகக்கடவுளைப் பற்றிய திருமுருகாற்றுப்படை, திருவிசைப்பா திருமுறையில் உள - பதினன்கு சாத்திரத்திலே சித்தியார் சிவப்பிரகாசம் இரண்டும் முருகனை ஏத்திப் போற்றுகின்றன; காவிய நாயகனைக் காட்டுகின்றன. "அருமறை ஆகமங்கள் அருங்கலை நூல் தெரிந்த அகத்தியனுக்கு ஒத்து உரைக்கும அருட்குருவாம் குருவை" என முருகனைக் குருவாகவும் சிங்கக்குட்டியாகவும் வீரமும் ஞானமும் பொருந்தக் கூறிப் பின்னரும் "திருமறை மாமுனிவர் முனி, தேவர்தந் தேவன், சிவனருள் சேர் திருமதலை, தவநிலையோர் தெய்வம், பொருமறை ஆர்கழல் வீரர் வீரன், கருமறையாவகை அருளிக் கதி வழங்குங் கந்தன்" என முருக பத்தியும் சிவபக்தியும் ஒன்றே எனக்காட்டுகின்றார் சித்தியாரில் அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள்.

"வளர் நிலவு குல அமரர் அதிபதி; நீல மயில் ஏறிவரும் மதலை; ஈசன் அருள் ஞான மகலை; அளவில் பல கலை அங்கம், ஆரணங்கள் உணர்ந்த அகத்தியனுக்கு ஓத்துரைக்கும் அண்ணல்; சூரன் உரம், எமது இடும்பை ஒங்கல் இரண்டு கூறுபட ஒளிதிகழ் வேல் உகந்த கந்தன்; களபமலி குறமகள் தனமணி முலைகள் கலந்த கந்தன்" எனச் சிவப்பிரகாசத்திலே உமாபதி சிவாசாரியாரும் முருகனைப் பாடிப் பரவி, "கந்தன் மலர் அடி இணைகள் சிந்தை செய்வாம்" என்கின்றார். "கதி வழங்குங் கந்தன் கழல் இணைகள் எம் சிரத்தில் கருத்தில் வைப்பாம்" என்கின்றார் அருள்நந்தி சிவாசாரியார். கருவில் இனிப் பிறவாமையாகிய கதியை வழங்கும் கந்தன் என்றமையால் முருகன் சிவன் சிவகுருநாதன், சுவாமிநாதன் என்பதனை நிலை நிறுத்துகின்றார்.

முருகப்பெருமான் சிவபெருமான் போல அகத்தியர்க்குங் குரு; அவர் தமிழ்க் குரு; சிவஞான போத குரு. திருநந்திதேவரும் திருமுருகனிடம் ஞான உபதேசம பெற்றார். அப் பரம்பரை ஸ்கந்த பரம்பரை. அவ்வாதீனம் சிவஞான போதத்தைப் பல வழியிற் பரப்புவதில் அருந் தொண்டாற்றியுள்ளது. ஈழநாடு தந்த துறவி ஸ்கந்த பரம்பரையினர்; சிவஞானபோதமபாடிய பரிசோதகர். முருகன் உலக போகம் மாத்திரம் அளிப்பவரல்லர். ஞான போகமும் அளிப்பவர். அவர் சிவ குரு; சிவம்.

# காங்கேயன்றுறை இடைத் தேர்தல்

(1ஆம் பக்கத்து வளர்ச்சி)

கடந்த பொதுத் தேர்தலிற் நாலு வேட்பாளர்கள் இங்கு போட்டியிட்டிருக்கின்றார்கள். அவர்களில் இருவர், திரு சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு ஆதரவாக இம்முறை தேர்தற் பிரசாரம் செய்கின்றார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டோர் விபரமும் அவர்கள் பெற்ற வாக்குகளும் வருமாறு:

| | |
|---|---|
| சா. ஜே. வே செல்வநாயகம் (தமிழரசு) | 13, 520 |
| வி. பொன்னம்பலம் (பொது உடைமை) | 8, 164 |
| செ. சுந்தரலிங்கம் (ஈ. த. ஒ. மு.) | 5, 788 |
| ரி. திருநாவுக்கரசு (ஸ்ரீ. கா.) | 3, 051 |

இம்முறை சா. ஜே. வே செல்வநாயகம் [தமிழர் கூட்டணி] வி பொன்னம்பலம் [ஐ. மு ] அம்பலவாணர் [சுயேட்சை] ஆகியோர் போட்டியிடுகின்றார்கள். திரு. அம்பலவாணர் இலங்கை - இந்திய இணைப்பு என்ற கொள்கையை முன் வைத்துப் போட்டியிடுகின்றார். வங்காளதேசம் தோன்றியுள்ள யுகத்தில் இது எந்தளவு தூரம் சாத்தியமானது என்பதைக் காலம்தான் நிர்ணயிக்கவேண்டும். மற்றைய இரு வேட்பாளர்களதும் கொள்கைகளும் இலட்சியங்களும் நாடறிந்ததாகும்.

1971 இல் நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் காங்கேசன்றுறைத் தொகுதியில் மொத்தம் 70, 0623பர் வதிகின்றனர். இதில் ஆண்கள் 34, 169 ஆகும். பெண்கள் 35 893 ஆகும். இதில் பதினெட்டு வயதிற்குகுட்பட்டோர் தொகை 30, 809; பதினெட்டு வயதிற்கு மேற்பட்டோர் தொகை 39, 253 ஆகும்.

இவர்களில் இலங்கைத் தமிழர் 67, 149, கண்டிய சிங்களவர் 1269, இந்தியத் தமிழர் 728, கீழ்நாட்டுச்சிங்களவர் 605, இலங்கைச்சோனகர் 224, இந்தியச் சோனகர் 12, பறங்கியர் 33, மலேயர் 35, பிற இனத்தவர் 7 ஆகும் மதரீதியாக இவர்கள்: இந்துக்கள் 57, 796, உரோமன் கத்தோலிக்கர்கள் 10. 491, பௌத்தர்கள் 680, முஸ்லீம்கள் 546, கிறிஸ்தவர்கள் 532, பிற மதத்தவர் 17 ஆகும். [சாதி அடிப்படையில் சன கணிதம் இப்பொழுது நடைபெறுவதில்லை, என்றாலும் சுமார் 8000 சிறுபான்மைத் தமிழ் மக்கள் காங்கேசன்றுறைத் தொகுதியில்இருப்பதாகத்தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட திரு. செ. சுந்தரலிங்கம் அவர்களுக்கும், திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் மொத்தம் [ 5. 788 + 3,051 = 8 839 ] 8, 839 வாக்குகள் கிடைத்துள்ளன. திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு கிடைத்த 13, 520 வாக்குகளுடன் முற்கூறியயிருவருக்கும் கிடைத்த வாக்குகளையும் ஒன்று கூட்டின் மொத்தம் 22, 359 ஆகும். திரு வி. பொன்னம்பலம் அவர்களுக்கு கிடைத்த வாக்குகள் (1970இல்) 8.164

திரு. சா. ஜே.. வே. செல்வநாயகம் அவர்களை ஆதரித்து நடைபெறும் தேர்தற் கூட்ட மேடைகளிலே சிறையிருக்கும் வாலிபர்கள், புதிய குடியரசு அரசியற்றிட்டம், பல்கலைக் கழக புகுமுக தரப்படுத்தல், நாட்டில் நிலவும் உணவு நெருக்கடி இதர உப உணவுப் பொருள் தட்டுப்பாடு, கூட்டுறவு அமைப்புகளில் நடைபெறும் மோசடிகள் பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்றது.

திரு. வி. பொன்னம்பலம் அவர்களை ஆதரித்து நடைபெறும் தேர்தற் கூட்ட மேடைகளில் நாடு குடியரசான பின்னர் தமிழர்கள் இழந்த உரிமைகள் என்ன? புதிய அரசியற் றிட்டத்தை எதிர்ப்பவர்கள் வெற்றிபெற்றால் பாராளுமன்றத்தில் இவ்வரசியற்றிட்டத்திற்கு விசுவாசமாக நடப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்வார்களா? என்ற வினக்கள் எழுப்பப்படுகின்றன. மாணவர்கள் தரப்படுத்தல் பற்றி வி. பொ. அவர்களது மேடையிலும் கண்டனக் குரல்கள் எழுப்பப்படுகின்றன என்பதையும் நாம் மறைக்க முடியாது.

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

## நினைவு உரை

காரைநகர் சைவமகா சபை ஆதரவில் 7-2-75 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு அருணாசலம் ஞாபக சமயப் பிரசங்கம் காரைநகர் சைவமகா சபைக் மண்டபத்தில் நடைபெறும்

பண்டிதர் நா. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ச. சபாபதி, டி. டி. நாணயக்கார ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.


# புத்தக விலை விபரம்

| | ரூ. ச. |
|---|---|
| திருச்செந்தூர்ப்புராணம் ... ... | 15 00 |
| தஞ்சைவாணன் கோவை ... ... | 10 00 |
| சிதம்பரமான்மியம் ... ... | 1 00 |
| நளவெண்பா கலிநீங்கு காண்ட உரை ... | 75 |
| ஆரோக்கிய தேகப் பயிற்சி ... ... | 1 00 |
| இலக்கிய வாசகம் 3-ம் புத்தகம் ... | 65 |
| விஞவெண்பா ... ... ... | 50 |
| உண்மை நெறி விளக்கம் ... ... | 50 |
| ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் ... ... | 50 |
| சமய குரவர் சந்தான குரவர் ... | 1 25 |
| கதிர்காம மான்மியம் ... ... | 50 |
| புலியூர் அந்தாதி ... ... | 2 00 |
| மறைசை யந்தாதி ... ... | 50 |
| கோபால — நேசரத்தினம் ... ... | 1 25 |
| மார்க்கண்டன் நாடகம் வாளபிமன் நாடகம் | 4 00 |
| நாவலர் சற்குருமணி மாலை ... ... | 1 0 |
| சைவபோதம் முதலாம் புத்தகம் ... | 75 |
| சைவபோதம் இரண்டாம் புத்தகம் ... | 1 00 |
| நல்வழி ... ... ... | 15 |
| கிருட்டிணன் தூது உரை ... ... | 1 75 |
| சென்னியர் ... ... ... | 2 00 |
| சிவபூசைத் திரட்டு ... ... | 50 |
| மஹாளய பட்சம் ... ... | 25 |
| சரித்திர சங்கிரகம் ... ... | 1 00 |
| சைவசமய அறிமுகம் ... ... | 1 00 |
| செந்தமிழ் வாசக மஞ்சரி ... ... | 1 25 |
| வெற்றிவேற்கை ... ... ... | 10 |
| நமச்சிவாய மாலை ... ... ... | 15 |
| நன்நெறி ... ... ... | 15 |
| சைவசமய நெறி இரண்டாம் வகுப்பு ... | 75 |
| சைவ சமயநெறி 3ம் வகுப்பு (வர்ணப் பதிப்பு) | 1 75 |
| சைவசமய நெறி ஒன்பதாம் வகுப்பு ... | 2 00 |
| பாலபாடம் அரிவரி — ... | 60 |
| பாலபாடம் முதலாம் புத்தகம் ... | 50 |
| பாலபாடம் இரண்டாம் புத்தகம் ... | 70 |
| பாலபாடம் நான்காம் புத்தகம் ... | 1 05 |
| பாலபாடம் ஆரும் புத்தகம் ... | 1 20 |
| பாலபாடம் எட்டாம் புத்தகம் ... | 1 25 |
| பாலகதாவாசகம் இரண்டாம் புத்தகம் ... | 50 |
| பாலகதாவாசகம் மூன்றும் புத்தகம் ... | 65 |

| | ரூ. ச. |
|---|---|
| பாலகதாவாசகம் நான்காம் புத்தகம் ... | 80 |
| கந்தபுராணம் முதல் 100 பாடல்கள் வித்துவான் ந. சுப்பையபிள்ளை உரை ... | 1 50 |
| திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு 1 — 10 அதிகாரம் ... | 75 |
| திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு 1 — 20 அதிகாரம் ... | 1 25 |
| சுப்பிரமணிய பாரதியார் பாடல் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை உரை .. | 85 |
| The Glories of Saivaism S. Shivapathasundarampillai ... | 1 50 |
| An Outline of Sivagnana Bodham S Shivapathasundarampillai ... | 1 25 |
| Dakshinamurthi His Life & Teachings | 1 50 |
| The Genesis of the Siva Gnana Bodham | 50 |
| The Elements of Saiva Siddhantam | 1 50 |
| An Analysis of the Tirumantiram | 5 00 |
| Arumuga Navalar S. Sivapathasundarampillai ... | 1 00 |
| Tamil Sages and Seers of Ceylon ... | 1 00 |
| Sri La Sri Arumuga Navalar ... | 2 00 |
| A Study of the Svetasvatara Upanishad | 1 00 |
| An Education of the Tiruppasuram | 1 00 |
| The Founders of Modern Ceylon ... | 2 50 |
| C. W. Thamotharampillai ... ... | 1 50 |

பத்துப் பிரதிகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு இருபது வீத கழிவு உண்டு.

- தபாற் செலவு தனி
- வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு :

அதிபர்
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி : 356

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ௵ தை மீ ௧௮ ௳ வெள்ளி

## மாநிலம் மறக்க மாட்டாது!

இருபத்தேழாண்டுகளுக்கு முன் ( 1948 ) முதலாம் மாதம் முப்பதாம் நாள் இப் பூவுலகம் இருளடைய இந் நூற்றாண்டிலே தலை சிறந்து விளங்கிய பரோபகாரப் பெருமகன் அரனடி அடைந்தனர். மனித குலம் இனியென் செய்யலாம் என்று ஏங்கி இரக்கண் நிலைமையை எய்தியது. அன்புவழி அறநெறி அண்ணல் ஆருயிர் நீத்தார். யார் கையில்? மறத் தொழில் வலகணுளன் ஒருவன் கைத் துப்பாக்கியினல் அறத்தின் சின்னத்தை அழித் தொழிக்கலாம் என்ற எண்ணினன். பதுங்கி மறைந்த பயங்கர வாதியின் கோழைத்தனம் ஒரு புறம். கொடூர செயலுக்கு அடுக்குப் பார்த்த அட்டூழியர் குழு இன்னொரு புறம். குண்டு பாய்ந்த அக் கணமே குணமென்னுங் குன்றேறிய அரசியற் குரவர் அரன் நாமமே அரற்றிய வண்ணம் உலக வாழ்வை நீத்தனர். "உடம்புடன் இயைந்த உயிர் குடம்பைத் தனித்தொழியப் புட்பறந்தாங்கு உம்பர் பாலேகியது" பிடிசாம்பரான உடம்பெனினும் பெருமகனரின் அறநெறி அவனியில் நின்றது.

தாரணி போற்றும் பாரத நாட்டின் தவப்புதல்வனின் வாழ்க்கை வரலாறு தனிப்புராணத் தகைமை சால் இதிகாச இலக்கியமாயமைந்து விட்டது அன்புநெறியென்னவென்று அறங்கூறும் அத்தனை நூல்களையும் ஒருவர் அறியாதிருந்தாலும் அண்ணல் காந்தியின் வாழ்க்கை வரலாற்றின் உண்மை உபதேசத்தை உற்றெண்ணுவரேல் மனிதப் புனிதத்தையடைவர். அத்தகைய சத்தி வாய்ந்த சித்தத்தைக் கொண்ட உத்தமர் காந்தி உலகிற் குபகரித்த முன்மாதிரி அரசியலுக்கு அறவியல் அமைத்தது; மனுவியலுக்கு மதவியல் வகுத்தது. புன்னெறி போக்க நன்னெறி புகட்டியது.

ஆண்டுகள் பலவாயின அந்த அரசியற் குரவரான அறநெறித்திறலோர் விண்ணுலகு மேவ இத்தனை ஆண்டுகளிலும் அன்புநெறி வேருன்றி விட்டதா? அரசியல் பிழையாது அறமோங்கியதா? என்றாய்ந்துபார்க்கும் பொழுது மாநிலம் மாயையின் இருளில் மூழ்கி வன் செயலுக்குரியதாய் மாறிவிட்டதென்றால் அது பொருந்தாக் கூற்றாகாது மகாத்மாக வாழ்ந்து வழிகாட்டிய பாரதப் பூமியிலேயே தகாத முறையிலே அரசியற் றலைவர்கள் ஒழுகுகின்றார்கள், வன்செயலிலே வலிமை தருவது அரசியல ஆதிக்கத்துக்கு வேண்டியதென்றெல்லாம் வழிதவறிப் பலவேறு கட்சிகளும் புன்மைப் போதனை செய்து வருகின்றன. இந்தியநாட்டின எழில் மிக்க இலட்சியமாக விளங்கிய அகிம்சை இயக்கம் பெயரளவிலேயே இருக்கின்றது. உலக நாடுகளும் சர்வோதயத்தின் தத்துவத்தை அறிந்து அவ்வழி நிற்கவியலாது பயங்கர இயக்கங்களின்பயமாய்விட்டன.

இந்த நிலையிலே ஈடேற்றத்துக் ஏதாவது வழியிருக்கின்றதா என்று எண்ணுபவர்களும் உண்டு. அவர்கள் அந்த அகிம்சை இயக்கத்தேயே மீண்டும் கைக்கொள்ள வேண்டும் என எண்ணுகின்றார்கள் எனவே 30-1-1948 என்ற கறை படிந்த நாளை எண்ணும் பொழுது உலகம் உய்ய மகாத்மாவின் உன்னத சேவையை உன்னி உடல் பொருள் ஆவி மூன்றையும் அன்னார் அர்ப்பணித்து எந்த இயக்கத்தில இயங்கினரோ அந்த அகிம்ச அறநெறியை மககள் மறுபடியும கைக் கொள்வதே சாலச் சிறந்த சாதனை என்று முடிவு செய்யாமலிருக்க முடியாதென்று நவிலுகின்றோம்.

## இன்று சண்டேசர் குருபூசை

1 ஆம் பகக வளாச்சி

சண்டீசர் தஞ்செயலாற ருன்"

என உய்யவநத தேவநாயனாராலும புகழப்பட்டமை காணக திருஞானசமபநத மூர்ததி நாயனா புராணததிலே திருமுகப்பாசுரத்தின்றுற்பரியம கூறுமிடத்து "கருதுங் கடிசேர்ந்த

பொனுந்திருப்பாட்டி லீசா மருவும பெரும்பூசை

மறுததவர்க சோறன் மூத்தி தருதன் மையதாதல

சண்டீசர்தஞ் செய்கை தக்கோர்

பெரிதுஞ் சொலக்கேட்டன

மென்றனா பிள்ளை யார்,, "

என்றார் சேக்கிழார் நாயனார்.

## பெருந் திருவிழா

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மகப் பெருந் திருவிழாவில் 8-2-75 முதல் 24-2-75 தேதி வரை தினமும மாலை 6-45 தொடக்கம் 9-00 மணி வரை நல்லை ஆதீனம குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள் திருவிளையாடற் புராணம் பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்தத தேவஸ்தானம் ஒழுங்கு செயதுள்ளது. — —

## காங்கேசன் றுறை இடைத்தேர்தல்

5-ஆம் பக்கத்து வளர்ச்சி

திரு வி. பொ. அவர்களைக் கூட்டு முன்னணிக் கட்சிகள் மூன்றும் ஆதரித்துத் தேர்தற் பிரசாரம் செய்கின்றன. பல அமைச்சர்கள் வந்து போய்விட்டார்கள். இன்னும் பலர் வரவிருக்கின்றார்கள்.

என்றாலும் கல்வி அமைச்சர் இத் தேர்தற் பிரசாரத்தில் இதுவரை கலந்துகொள்ளவில்லை. மேலும் அவர் வருவார் என்ற நம்பிக்கையும் இல்லை.

திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களை ஆதரித்து தமிழர் கூட்டணிக்கட்சிகள் தேர்தற்பிரசாரம் செய்கின்றன, தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் சா. ஜே. வே. செல்வநாயகம அவர்களின் மேடையில் உரை நிகழ்த்தியுள்ளார்கள் என்றாலும் ஜி ஜி பொன்னம்பலம் அவர்கள் இதுவரை கலந்து கொள்ளவில்லை. மேலும் அவர் கலந்துகொள்ளலாம் என்று நமபுவதற்கும் இடமில்லை.

திரு வி. பொ. அவர்களது மேடைகளில் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் பேச்சுக்கு இடம் இருக்கின்றது. திரு. சா. ஜே. வே. செல்வநாயகம அவர்களது மேடைகளில் பாரம்பரிய தலைவர்களிலும் பார்கக இளைஞர்களின் பேச்சுக்கு நல்ல வரவேற்பு உண்டு.

## அவதானிகள் ஆரூடம்!

அரசியல் அவதானிகள் இத் தேர்தல் முடிவு பின் வருமாறு அமையலாம்என்று கருதுகின்றார்கள். சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு 1970 இலும் பார்க்கக் கூடுதல் மேலதிக வாக்குகள் ஆகலாம் என்றும, எதிர்ததுப் போட்டியிடும இருவரிலே பொன்னம்பலம் அவர்களுக்கு சென்ற தேர்தலிற் பெற்ற வாக்குகள் கிடைக்கலாம என்றும் கருத்து நிலவுகின்றது. இது சனநாயக யுகம். வாக்காளரின் நாடியைப் பிடித்துப் பார்க்கக் கூடிய அததுணை அநுபவம்பெற்ற அரசியல் மருததுவர்கள் யாரும் இல்லை! -ஆகவே, தேர்தல் முடிவு வரை பொறுததிருப்போம்.

## திருமணம்

### பத்மநாதன் — பத்மாவதி

யாழ்ப்பாணம், ஓட்டுமடம் வீதியைச் சேர்ந்த
திரு. திருமதி ச. சுப்பிரமணியம் அவர்களது குமாரன்
செல்வன் சு. **பத்மநாதன்** பி. எஸ்சி. [G. O B. A]
அவர்களுக்கும்

யாழ்ப்பாணம் அம்மன் வீதியைச் சேர்ந்த
திரு திருமதி ச. சின்னத்தம்பி அவர்களது குமாரத்தி
செல்வி **பத்மாவதி** பி. ஏ. அவர்களுக்கும்

எதிர்வரும் 5-2-75 புதன்கிழமை காலை 8-00 மணிக்கும்
9-00 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்த வேளையில்
மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

— உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்படுகின்றனர். —

## முனிவர் அளித்த ...

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

லுள்ள சிறு காடுகளில் அமைக்கப்பட்டன ஐம்புலன் வழிச்சென்று சிற்றின்பம் விழைதலே வாழ்வின் நோக்கமெனக் கொள்ளும் மக்கள் வசிக்கும் ஊர்கள் கிராமங்கள் நகரங்கள் முதலியவற்றில் முனிவர்கள் தம் ஆசிரமங்களை அமைத்தனர்.

ஆயினும், முனிவர்கள் நாடு நகரங்களில் வாழும் மக்களோடு தொடர்புடையவர்களாகவே இருந்து வாழ்ந்தனர். சனசமூகத்தை வெறுத்துக் காட்டு விலங்குகள் போல முனிவர்கள் வாழவில்லை என்பதை அறிவோம். கிராமங்களுக்கு அண்மையிலுள்ள சோலைகளில் விருப்பி உறைந்தனர்.

உண்டுடுத்து ஐம்புலனின்பம் நுகர விழையாமல் சில வாழ்க்கை நோக்கங்களைத் தேர்ந்தெடுத்துத் தம் வாழ்க்கை இலட்சியங்களை மகாநோக்கமாகக் கொண்டு முனிவர்கள் வாழ்ந்தனர்

முனிவர்கள் வீறதுமூட்டிக் குளிர்காய்வதிலும், ஆடு மாடுகளைக் கொன்று யாகம் செய்து உண்ணுதலிலும் காலம்கழித்தனர். முனிவர்கள் ஞான வேள்வி செய்து ஞானவாராய்ச்சி செய்வதில் ஒப்பாரும் மிக்காருமின்றப் பெரும்புகழ் பெற்றனர்.

கல்வித்தி, கந்புத்தி, கடவுள் வழிபாட்டுத்தி என்னும் முத்திமையையுணர்த்து ஓமம் செய்தனர். பௌத்த முனிவர்களும், சமண முனிவர்களும் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய விரதங்களைக் கைக்கொண்டனர். துறவிகள் சிலர் இணைவிழைச்சு என்னும் இயல்பூக்கத்துக்கு இடங் கொடுத்தல் பாவம் எனக் கருதியிருக்கலாம். கழிபெருங்காமமும் பைசாசமணமும் கடியப்பட்டவையாயினும், இல்வாழ்க்கையும் ஐந்திணையொழுக்கமும் பாராட்டப்பட்டவை எனத் துணிவேம். அமலர்கள், நாலடியார் என்னும் ஒழுக்க நூலையும் சீவகசிந்தாமணி என்னும் இலக்கியத்தையும் நன்னூல் இலக்கணத்தையும் தந்தனர். பௌத்த முனிவர்கள் சில காப்பியங்கள் இயம்பினர்; சிலையெழுதல், ஓவியம் எழுதல் முதலிய கவின்கலைகளை ஓம்பினர்.

## மணவாளக்கோலத் திருவிழா

—-0-—

உடுவிலம்பதி குமரகோட்டம முருகமூர்த்திகோவில் மணவாளக் கோல விழா தை 19-ஆம் நாள் (1-2-75) சனிக்கிழமை முற்பகலில் மகா சங்காபிடேகமும் இரவு சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது சிறப்புச்சொற்பொழிவும, அதையடுத்து, திருககல்யாண மகோற்சவமும் பூந்தண்டிகையிற் பெருமான திருவீதி உலாவரும் நிகழ்ச்சி ஆதியனவுடன் நிறைவுறும்.

வங்காள தேசம்

## அரசியலமைப்பில் பெரு மாற்றம் ?

பிரதமர் சனாதிபதியானார்; 26 அமைச்சர்கள் பொருந்திய அமைச்சரவை புதிய பிரதமர் மகமது மன்சூர் தலைமையில் நிறுவப்பெற்றுள்ளது.

ஆயினும் சனாதிபதி ஷேக் முஜிப்பூர் இரகுமானிடம் நாட்டுப் பாதுகாப்பும் மந்திரி சபைப் பொறுப்பும் உண்டு. மின்னாது முழங்காது ஒரு நாளிலே பெருமாற்றம் அரசியல் அமைப்பில் உண்டானது வங்காள தேசத்திலேதான என்பது குறிப்பிடத்தக்கது.

## வெங்காயத்தின் குணம்

வெங்காயமும் ஒரு வகைக் கிழங்கேயாகும். சிறந்த மருத்துப் பொருளும் கொண்டது அது வெங்காயத்திற்கு ஈடாக மருந்து உணவு இல்லை. இதைச் சமைத்து ஐந்து நிமிடங்களில் இதிலுள்ள சததுப் பொருள்கள் வெளியாகிவிடுகின்றன. ஆகவே, பச்சையாக உண்பதே சிறந்தது.

நாள்தோறும் 4 அல்லது 5 சிறு வெண்காயங்களைப் பச்சையாகவே உண்டுவருபவர்களுக்கு நோய் அணுகுவதில்லை, வெங்காயததைச் சட்டினி, துவையல் முதலியவற்றொடு நாள் தோறும் சேர்த்துக் கொள்வது மிகவும் நலம் பயக்கும்.